செ.வெ.எண் -40 நாள்: 17.07.2018

# பத்திரிக்கைச் செய்தி.

ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர் இலவச பயிற்சி பெற தாட்கோ மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர் இலவச பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்கள் 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும், 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும், கனரக வாகனப் பயிற்சி பெற விரும்புவோர் 20 வயது பூர்த்தி அடைந்து, ஏற்கனவே இலகுரக ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய பேட்ஜ் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், பயிற்சி பெறுவதற்கான காலம் இலகுரக வாகனப்பயிற்சிக்கு 30 நாட்கள், கனரக வாகனப்பயிற்சிக்கு 45 நாட்கள் ஆகும். பயிற்சி கட்டணம் முற்றிலும் இலவசம், பயிற்சி காலத்தின்போது பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். மேற்படி பயிற்சி நாமக்கல் மாவட்டம், வள்ளிபுரம் அஞ்சல், அசோக் லைலேண்ட் வாகன ஓட்டுநர் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக வழங்கப்படவுள்ளது. பயிற்சி பெற விரும்புவோர் அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகம், இரண்டாம் தளத்தில் இயங்கி வரும் மாவட்ட மேலாளர், தாட்கோ, அலுவலகத்தை அணுகி விண்ணப்பம் இலவசமாக பெற்று சாதிச்சான்று, வருமானச்சான்று, கல்வித்தகுதி சான்று, போட்டோ ஆகியவற்றுடன் விண்ணப்பித்து பயன்பெறுமாறு **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள்** தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**